## மாதவரம் – ஓ.எம்.ஆர் இடையே

# சென்னை புறநகரை இணைக்கும் 22 கி.மீ மெட்ரோ ரெயில் பணிகள்!

## டெண்டர் கோரப்பட்டுள்ளது!!

சென்னை, ஜன 31

சென்னையில் தற்போது இரு வழித்தடங்களில் 45 கிலோ மீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. 2ம் கட்ட மெட்ரோரெயில்திட்டத்தில் மாதவரம் சிறுசேரி சிப்காட் வழித்தடத்தில்45.13கி.மீ., தொலைவிலான மெட்ரோ ரெயில் பாதை அமைகிறது. இதில் 19.9 கி.மீ மேம்பால முறையிலும், 26.72 கி.மீ சுரங்கப்பாதை முறையிலும் அமைக்கப்படுகின்றன. கலங்கரைவிளக்கம் – பூந்தமல்லி இடையே 26.09 கி.மீ., தொலைவிலான மெட்ரோரெயில்பாதையில் 16 கி.மீ., மேம்பால முறையிலும், 10.07 கி.மீ சுரங்க முறையிலும் அமைகிறது. மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையே 47 கி.மீ., தொலைவிலான5வதுவழித்தடத்தில் 41.17 கி.மீ தூரம் மேம்பாலமுறையிலும், 5.8 கி.மீ சுரங்க முறையிலும் அமைகிறது. தற்போது, சென்னைநகரின்தெற்குமற்றும் மேற்கு புறநகரில் மாதவரம் அல்லது போரூரில் இருந்து ஓ.எம்.ஆர் ஐ.டி. பகுதியை இணைக்கும் வகையில் 22 கி.மீ தொலைவிலான மெட்ரோ ரெயில் மேம்பால பணிகளுக்கு டெண்டர் கோரப்பட்டுள்ளது.

118.9 கி.மீ தொலைவில் 2ம் கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெறுகிறது. இதில் சோழிங்கநல்லூர்–சிறுசேரி சிப்காட் இடையே 10.13 கி.மீ தொலைவிலான மெட்ரோ ரெயில் பணிகள் மற்றும் கோயம்பேடு–புழுதிவாக்கம் இடையிலான 12 கி.மீ தொலைவிலான மெட்ரோ ரெயில் பணிகள் உள்பட 2ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்திற்காக இதுவரை 13 முறை டெண்டர்கள் கோரப்பட்டுள்ளது. போரூர் – பூந்தமல்லி மெட்ரோரெயில்வழித்தடப் பணிகள் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 2ம்கட்ட மெட்ரோரெயில்திட்டத்தில் 3 வழித்தடங்களுக்கான பணிகளும் 2026ம் ஆண்டுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சோழிங்கநல்லூர்–சிறுசேரி சிப்காட் இடையே மேம்பால முறையில் மொத்தம் 9 மெட்ரோ நிலையங்கள் அமைய உள்ளன. இதன் மூலம் ஐ.டி. தொழில் நிறுவனங்கள் அதிகம் இயங்கும் ஓ.எம்.ஆர் பகுதியினர் பயனடைவர். இதே பகுதியில் மெட்ரோ ரெயில் பணிமனையும் அமைய உள்ளது. 45.8 கி.மீ தொலைவுள்ள மாதவரம் – சிப்காட் இடையிலான3வதுவழித்தடத்திற்கான பணிகளுக்கு ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி வழங்கியுள்ளது. தரமணி – சோழிங்கநல்லூர்இடையே மெட்ரோபணிகளுக்கு இதுவரை டெண்டர் கோரப்படவில்லை.

12கி.மீதொலைவு கொண்ட கோயம்பேடு – புழுதிவாக்கம் வழித்தடத்தில் மொத்தம் 12 மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைய உள்ளன. இதே வழித்தடத்தில் டி.எல்.எப் உள்ளிட்ட பல ஐ.டி. நிறுவனங்கள் உள்ளன. மேலும் கோயம்பேடு, ஆலந்தூர், பரங்கிமலை ரெயில் நிலையங்களில் மாறி வேறு பகுதிகளுக்கும் பயணிக்க முடியும். உதாரணத்திற்கு நாவலூரில் உள்ள பயணிகள், அடையாறு, ராதாகிருஷ்ணன் சாலை, ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், கெல்லீஸ், பெரம்பூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரடியாக பயணிக்கலாம். அதே சமயம், சென்ட்ரல் ரெயில் நிலையம் செல்ல, ஆயிரம் விளக்கு அல்லது கே.எம்.சி மற்றும் டி.நகர் செல்ல திருமயிலையில் இறங்கி தடம் மாறிப்பயணிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.